**ஜனவரி – 23**

# தேசியச் செய்திகள்

## 32வது PRAGATI கருத்தரங்கு

- அதி செயல்திறன் கொண்ட ஆளுகை மற்றும் உரிய நேரத்தில் நடைமுறைப் படுத்துதல் என்ற திட்டத்தின் (Pro-Active Governance and Timely Implementation - PRAGATI) கீழ், மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்துப் பிரதமர் ஆய்வு செய்தார்.
- PRAGATI திட்டமானது பிரதமரால் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இது பொதுவாக பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான ஒரு ஊடாடும் தளமாகும்.

## பழங்குடியின இளைஞர் பரிமாற்றத் திட்டம்

- பழங்குடியின இளைஞர் பரிமாற்றத் திட்டத்தை மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் நேரு யுவ கேந்திர சங்கதன் என்னும் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.
- இந்தத் திட்டமானது பழங்குடியின இளைஞர்கள் கலாச்சாரம், மொழி, வாழ்க்கை முறைகள், கல்வி வழிகள், மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் கல்வி வாய்ப்புகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்வதற்காக பல்வேறு இடங்களுக்குச் செல்வதற்கான வாய்ப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மகாத்மா காந்தி சமுதாயக் கூடம்

- மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜரின் தலைநகரான நியாமியில் இந்தியாவானது சமீபத்தில் முதலாவது மகாத்மா காந்தி சமுதாயக் கூடத்தைத் திறந்து வைத்துள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டில் 150வது பிறந்த நாள் கொண்டாடப்பட்ட மகாத்மா காந்தியின் நினைவாக அவரைக் கௌரவிப்பதற்காக இந்தியாவினால் ஆப்பிரிக்காவில் நிறுவப் பட்ட முதலாவது மையம் ஆகும்.




## ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி

- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நேபாள பிரதமர் ஒலி ஆகியோர் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியை பீகாரில் ஜோக்பானி-பிராட்நகரில் திறந்து வைத்தனர்.

- இந்திய அரசின் உதவி மூலம் இந்திய - நேபாள நாடுகளின் எல்லையில் கட்டப்பட்ட இரண்டாவது சோதனைச் சாவடி இதுவாகும்.
- இந்தப் புதிய ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியின் நோக்கமானது எல்லைக்கு அப்பால் உள்ள மக்களின் வர்த்தகம் மற்றும் போக்குவரத்தை எளிதாக்குவதாகும்.
- இவ்விரு நாடுகளின் முதலாவது ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியானது 2018 ஆம் ஆண்டில் பீகாரில் ராக்சால்-பிர்குஞ்சில் கட்டப்பட்டது.




# சர்வதேசச் செய்திகள்

## UNAIDS

- உலகப் பொருளாதார மன்றத்தினால் நடத்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் எய்ட்ஸ் எனும் கூட்டத்தில் (United Nations AIDS - UNAIDS) இந்தியா பங்கேற்றது.
- இந்தக் கூட்டத்தின் கருப்பொருள்: ஆரோக்கியம் குறித்த புதுமைகள், முதலீடுகள் மற்றும் கூட்டாண்மை ஆகியவற்றை மேம்படுத்துதல் தொடர்பான அனைவருக்குமான அணுகல் என்பதாகும்.
- உலக அளவில் எச்.ஐ.வி தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட மூன்றாவது பெரிய நாடு இந்தியா ஆகும்.
- இந்தியாவில் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு (National AIDS Control Organization - NACO) என்பதால் செயல்படுத்தப் படுகின்றது.

Joint United Nations Programme on HIV/AIDS
UNAIDS
UNICEF • UNDP • UNFPA • UNDCP
UNESCO • WHO • WORLD BANK

## மக்களாட்சிக் குறியீடு


- பொருளாதார நுண்ணறிவுப் பிரிவானது 2019 ஆம் ஆண்டிற்கான மக்களாட்சிக் குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டின்படி, உலகில் நான்கு வகையான ஆட்சியமைப்புகள் உள்ளன. அவை – முழுமையான மக்களாட்சி, குறைபாடு கொண்ட மக்களாட்சி, கலப்பின மக்களாட்சி

மற்றும் சர்வாதிகார ஆட்சி என்பதாகும்.

- இந்தக் குறியீட்டில் நார்வே நாடானது முதலிடம் பிடித்தது.
- நார்வேயைத் தொடர்ந்து இதில் ஐஸ்லாந்து மற்றும் ஸ்வீடன் நாடுகள் முறையே இரண்டாமிடத்தையும் மூன்றாம் இடத்தையும் பிடித்தன.
- முந்தையத் தர வரிசையுடன் ஒப்பிடும்போது இந்தியாவானது 10 இடங்கள் பின்தங்கி 51வது இடத்திற்குத் தள்ளப்பட்டது.
- இந்தியாவானது குறைபாடு கொண்ட மக்களாட்சி எனும் பிரிவில் வங்க தேசத்துடன் சேர்த்துப் பட்டியலிடப் பட்டிருக்கின்றது.
- முழுமையான மக்களாட்சி நாடுகளில் ஜெர்மனி, ஐக்கிய இராச்சியம் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் அடங்கும்.
- அமெரிக்க நாடானது இந்தியாவைப் போலவே ஒரு "சிக்கலான (குறைபாடுள்ள) மக்களாட்சி" நாடாகும்.
- சீனாவும் வட கொரியாவும் “சர்வாதிகார ஆட்சிகள்” என்று வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- பாகிஸ்தான் ஒரு "கலப்பின மக்களாட்சி" என்று வகைப்படுத்த ப்பட்டுள்ளது.

***இது பற்றி***

- இது 165 தனி நாடுகளுக்காகவும் 2 நிலப் பகுதிகளுக்காவும் உலக மக்களாட்சியின் நிலைமை பற்றிய ஒரு காட்சிப் படத்தை தருகின்றது.
- இந்தக் குறியீடு 5 கூறுகளை அடிப்படையாகக் கொண்டு இருக்கின்றது.
    - தேர்தல் முறை மற்றும் பன்முகத்தன்மை
    - குடிமையியல் உரிமைகள்
    - அரசின் செயல்பாடு
    - அரசியல் பங்கேற்பு
    - அரசியல் கலாச்சாரம்



Democracy Index 2019

India falls 10 places to 51st position

India slipped 10 places to 51st position in the 2019 Democracy Index's global ranking, according to The Economist Intelligence Unit, which cited "erosion of civil liberties" in the country as the primary cause for the downtrend. India's overall score fell from 7.23 in 2018 to 6.90.

Top 5

| Rank | Country | Score |
| --- | --- | --- |
| 1 | Norway | 9.8 |
| 2 | Iceland | 9.58 |
| 3 | Sweden | 9.39 |
| 4 | New Zealand | 9.26 |
| 5 | Finland | 9.25 |

Bottom 5

| Rank | Country | Score |
| --- | --- | --- |
| 163 | Chad | 1.61 |
| 164 | Syria | 1.43 |
| 165 | Central African Republic | 1.32 |
| 166 | Dem Republic of Congo | 1.13 |
| 167 | North Korea | 1.08 |

Saarc nations

| Rank | Country | Score |
| --- | --- | --- |
| 51 | India | 6.90 |
| 69 | Sri Lanka | 6.27 |
| 80 | Bangladesh | 5.88 |
| 91 | Bhutan | 5.30 |
| 92 | Nepal | 5.28 |
| 108 | Pakistan | 4.25 |
| 141 | Afghanistan | 2.85 |

Source: The Economist Intelligence Unit Report

## உஜ்வாலா திட்ட மாதிரி - கானா

- இந்தியாவின் வழிகாட்டுதலின் படி, இந்திய எண்ணெய்க் கழகத்தால் செயல்படுத்தப் படுகின்ற திரவ பெட்ரோலிய வாயு இணைப்பு வழங்கும் திட்டமான உஜ்வாலா திட்ட மாதிரியை கானா நாடானது செயல்படுத்த உள்ளது என்று அந்நாடு அறிவித்துள்ளது.
- இந்நிகழ்வானது தூய்மையான ஆற்றலை வழங்குவதில் உலகளாவிய தலைவராக இந்தியாவை அடையாளப் படுத்துகின்றது.
- பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனாவின் கீழ், 3 ஆண்டுகளுக்குள் ஏழைப் பெண்களுக்கு 8 கோடி சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- விறகுகளைப் பயன்படுத்துவதற்கு மாற்றாக திரவ பெட்ரோலிய வாயு இணைப்பினை வழங்குவதன் மூலம் குழந்தைகள் மற்றும் பெண்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்காக இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.

## சீனாவின் பிறப்பு விகிதம்

- சீனாவில் பிறப்பு விகிதமானது கடந்த 70 ஆண்டுகளில் மிகக் குறைவாகப் பதிவாகி உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் பிறப்பு விகிதமானது 1,000க்கு 10.48 ஆக இருந்தது. இது 1949 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட மிகக் குறைவானப் பதிவாகும்.
- இந்தப் பிறப்பு விகித வீழ்ச்சிக்கு பெரும்பாலும் சீனாவின் “ஒரு குழந்தைக் கொள்கை” காரணமாக இருக்கலாம். இந்தக் கொள்கையானது 1979 ஆம் ஆண்டில் அப்போதைய தலைவர் டெங் சியாவோபிங் ஆட்சியின் போது நடைமுறைக்கு வந்தது.
- கட்டுப்படுத்தப் படாத மக்கள் தொகை வளர்ச்சியானது பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பேரழிவிற்கு வழிவகுக்கும் என்று கருதப்பட்டது.
- மக்கள் தொகையைப் பற்றி முறையான ஒரு கோட்பாட்டை முன்மொழிந்த முதலாவது பொருளாதார நிபுணர் தாமஸ் ராபர்ட் மால்த்துஸ் ஆவார்.

## நீதித்துறைப் பரிமாற்றப் பிரதேசம்

- 1908 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட குடிமையியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 44A இன் கீழ் ஐக்கிய அரபு அமீரகத்தினை ஒரு "நீதித்துறைப் பரிமாற்றப் பிரதேசமாக" அறிவித்து மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகமானது ஒரு அரசு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- சட்டப் பிரிவு 44A ஆனது இந்திய நீதிமன்றங்களின் தீர்ப்புகளை வெளிநாட்டு நீதிமன்றங்களில் விசாரிப்பது தொடர்பாகவும் வெளிநாட்டு நீதிமன்றங்களின் தீர்ப்புகளை இந்தியாவில் விசாரிப்பது தொடர்பாகவும் அதிகாரத்தை வழங்கி வறுகின்றது.
- இந்த அறிவிப்பு ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள நீதிமன்றங்களின் பட்டியலை “மேல்மட்ட நீதிமன்றங்கள்” என்று அறிவித்தது.
- இந்த அறிவிப்பின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள வழக்குகளை விசாரிக்கத் தேவையான நேரத்தைக் குறைக்க முடியும் என்று நம்பப் படுகின்றது.
- ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்திய வெளிநாட்டவர்கள் அந்த நாட்டில் ஒரு குடிமையியல் வழக்கில் தண்டனை பெற்றால் அதன் பிறகு தங்களது சொந்த நாட்டில் பாதுகாப்பான புகலிடத்தை அவர்களால் நாட முடியாது.
- ஐக்கிய அரபு அமீரகத்தைத் தவிர, இந்தியாவின் "நீதித்துறைப் பரிமாற்றப் பிரதேசம்"

என்று அறிவிக்கப்பட்ட பிற நாடுகளாவன: ஐக்கிய இராச்சியம், சிங்கப்பூர், வங்க தேசம், மலேசியா, டிரினிடாட் & டொபாகோ, நியூசிலாந்து, குக் தீவுகள் (நியு உட்பட) மற்றும் மேற்கு சமோவாவின் ஆட்சிப் பகுதிகள், ஹாங்காங், பப்புவா நியூ கினியா, பிஜி, ஏடன் போன்ற பகுதிகள்.

## ஈரான் – அணுசக்தித் திட்டம் தொடர்பான பிரச்சினை

- ஐரோப்பிய நாடுகளானவை ஈரான் நாட்டின் அணுசக்தித் திட்டம் தொடர்பான பிரச்சினையை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு மன்றத்துக்கு அனுப்பினால், அணுக்கரு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்திலிருந்து (Nuclear Non-Proliferation Treaty - NPT) விலகப் போவதாக ஈரான் எச்சரித்துள்ளது.
- பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் கடந்த வாரம் 2015 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தின் விதிமுறைகளை ஈரான் கடைபிடிக்கத் தவறியதாகக் குற்றம் சாட்டி ஒரு திட்ட அறிக்கையைத் தயாரித்துள்ளன.
- இந்த நடவடிக்கையின் காரணமாக, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு மன்றமானது இறுதியில் ஈரானின் மீது சர்வதேசப் பொருளாதாரத் தடைகளை மீண்டும் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் அமையலாம்.
- பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தமான அணுக்கரு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் ஈரான் இணைந்ததற்கு ஈடாக, அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளிலிருந்து அதற்கு நிவாரணம் அளிக்கப் பட்டது.

### *NPT பற்றி*

- NPT என்பது அணு ஆயுதங்களின் பரவலைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பன்னாட்டு ஒப்பந்தமாகும்.
- இந்த ஒப்பந்தமானது 1968 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்டு 1970 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- இந்த ஒப்பந்தமானது அணு ஆயுத நாடுகளை 1967 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் அணுகுண்டு போன்ற கருவிகளைத் தயாரித்துச் சோதித்த நாடுகள் என வரையறுக்கின்றது. மற்ற அனைத்து நாடுகளும் அணு ஆயுதமற்ற நாடுகளாகக் கருதப் படுகின்றன.
- சீனா, பிரான்ஸ், ரஷ்யா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய ஐந்து நாடுகளும் அணு ஆயுத நாடுகளாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## தேசிய ஸ்டார்ட் அப் ஆலோசனைக் குழு

- தேசிய அளவில் புதிய தொழில்கள் தொடங்குவது தொடர்பான ஆலோசனைகளை வழங்கும் ஆணையத்தின் கட்டமைப்பு குறித்து மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இதற்கு மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் தலைமை தாங்க உள்ளார்.
- பொதுச் சேவை வழங்கலை மேம்படுத்துதல், அறிவுசார் சொத்துரிமைகளை உருவாக்குதல், அவற்றைப் பாதுகாத்தல் மற்றும் வணிகமயமாக்குதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளை ஒருங்கிணைப்பதற்காக இந்த ஆணையமானது பொதுத் துறை அமைப்புகளுக்கு

உதவ உள்ளது.

- உலக வங்கி வெளியிட்டுள்ள எளிதில் தொழில் தொடங்குவதற்கு உகந்த நாடுகளின் பட்டியலில் ஒட்டு மொத்தத் தர வரிசையில் 63வது இடத்தில் உள்ள இந்திய நாடானது அப்பட்டியலில் உள்ள ஒரு தொழிலைத் தொடங்குதல் எனும் பிரிவில் 136வது இடத்தில் உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஜெனோபோட்ஸ்

- அமெரிக்காவில் உள்ள விஞ்ஞானிகள் உலகின் முதலாவது "உயிருள்ள இயந்திரங்களை" உருவாக்கியுள்ளனர்.
- இவை ஆப்பிரிக்காவில் காணப்படும் வளை நகம் கொண்ட தவளையின் (ஜெனோபஸ் லேவிஸ்) உயிரணுக்களிலிருந்து வடிவமைக்கப்பட்ட, தானாகவே நகரும் திறன் கொண்ட சிறிய ரோபோக்களாகும்.
- நைஜீரியா மற்றும் சூடான் ஆகிய நாடுகள் முதல் தென்னாப்பிரிக்கா வரையிலான துணைநிலை சஹாரா பகுதிகள் முழுவதும் காணப்படுகின்ற "ஜெனோபோட்ஸ்" என்றழைக்கப் படுகின்ற நீர்வாழ் தவளை இனங்களின் காரணமாக, மில்லிமீட்டர் அகலம் கொண்ட இந்த ரோபோக்களுக்கு இவ்வாறு பெயரிட்டுள்ளனர்.
- ஜெனோபோட்டுகளானவை கொண்டு செல்ல வேண்டியப் பொருட்களை எடுத்துக் கொண்டு இலக்கை நோக்கி நகர்கின்றது (ஒரு நோயாளிக்குள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டுச் செல்ல வேண்டிய மருந்து போன்றது). இலக்கை அடைந்த பின்னர் அவை விடுவிக்கப்பட்டு அவை கொண்டு சென்ற மருந்து நோயாளியைக் குணப்படுத்துகின்றது.

# முக்கிய தினங்கள்

## சுபாஷ் சந்திரபோஸின் பிறந்த நாள்

- இந்தியா சுபாஷ் சந்திரபோஸின் 123வது ஆண்டு பிறந்த நாள் விழாவினை அனுசரித்தது.
- அவர் 1897 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் தேதியன்று பிறந்தார்.
- நேதாஜியின் பிறந்த நாளை நினைவு கூரும் பொருட்டு, இந்திய அரசு வாரணாசியில் நேதாஜியின் (நேதாஜி கோயில்) பெயரில் ஒரு தலித் பெண்ணை தலைமைப் பூசாரியாக நியமித்து ஒரு கோயிலைத் திறந்து வைக்க ஏற்பாடு செய்துள்ளது.
- இந்தக் கோயிலானது பாரத அன்னையை வழிபாடு செய்யுமாறு அமைக்கப்பட உள்ளது.
- இந்தக் கோயிலானது சிவப்பு, வெள்ளை மற்றும் கருப்பு வண்ணங்களில் கட்டப்பட உள்ளது.
- சிவப்பு நிறமானது புரட்சியையும் கருப்பு நிறமானது வலிமையையும் வெள்ளை நிறமானது அமைதியையும் குறிக்கின்றது.
- இந்திய அரசானது 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் தேதியன்று ஒரு விமான விபத்தில் நேதாஜி இறந்துவிட்டார் என்பதை 2017 ஆம் ஆண்டில் உறுதிப்படுத்தியது.

- Born January 23, 1897, Bose was one of 14 siblings
- Twice-elected **president of the Congress,** founder and president of the **All India Forward Bloc,** and founder of Provisional Govt of Free India
- Advocated **armed struggle** for India's independence
- Under house arrest before escaping from India in 1940, **arrived in Germany 1941**
- **Met Hitler** and sought military help to fight against the British



- Attempted to rid India of British rule during WWII by **enlisting help of Nazi Germany and Japan**
- Formed **Azad Hind Fauj** (Indian National Army) INA
- Moved to **Japanese-held Sumatra in 1943,** where he revamped INA, which fought alongside Japan in an unsuccessful bid to invade India
- **Disappeared in August 1945** after last being seen at Taihoku airport. Believed to have died when his plane crashed

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★